# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 50 /2022** நாள்: 17.02.2022

**நகர்ப்புற உள்ளாட்சி சாதாரணத் தேர்தல் - 2022 தொடர்பாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கு 16.02.2022 அன்று வரை 670 புகார்கள் வரப்பெற்றுள்ளன.**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல்கள் தொடர்பாக அரசியல் கட்சிகள், பொதுமக்கள் மற்றும் வேட்பாளர்களிடமிருந்து புகார்களைப் பெறுவதற்காக, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய அலுவலகத்தின் தரைத்தளத்தில் 24 மணி நேரமும் இயங்கும் "புகார் மையம்" 27.01.2022 அன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த புகார் மையத்தில், வார்டு மறுவரையறை, இட ஒதுக்கீடு, சுவர் விளம்பரம், வாக்காளர் அடையாள அட்டை, வாக்காளர் பட்டியல், மாதிரி நடத்தை விதிகள், வேட்பு மனு தாக்கல், சின்னம் ஒதுக்கீடு, தேர்தல் விதி மீறல் தொடர்பான 670 புகார்கள் 16.02.2022 வரை வரப்பெற்றுள்ளன. இந்த புகார்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு, உரிய விளக்கங்கள், தகவல்கள் மற்றும் தெளிவுரைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு உடனுக்குடன் அளிக்கப்பட்டு வருகின்றன. புகார்களின் தன்மைக்கேற்ப, அவை சம்பந்தப்பட்ட மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டும், உடனடியாக ஆய்வு செய்து புகார்களின் உண்மைத் தன்மையைக் கண்டறிந்து, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

<u>கட்டணமில்லா தொலைபேசி எண்கள்</u>

1800 425 7072
1800 425 7073
1800 425 7074

தேர்தல் நடவடிக்கைகள் முடிவு பெறும்வரை இப்புகார் மையம் தொடர்ந்து இயங்கும் என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

17/2/2022
மக்கள் தொடர்பு அலுவலர்